கனம் திரு. பூ. கக்கன் : ஆலைக்குத் தேவையான கரும்பைத் தான் ஆலைக்கே கொடுக்கவேண்டுமென்று உத்தரவிட்டிருப்பதாக நினைக்கிறேன். ஆலையின் தேவைக்குப் போக மிஞ்சி இருந்தால் அதைப் பயன்படுத்துவதுபற்றி யோசித்து முடிவு செய்வார்கள்.

நர்சுகள் பயிற்சி.

*** 167 கேள்வி.—திரு. எம். எஸ். மணி** : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆண்களுக்கு 'நர்ஸ்' பயிற்சி அளிக்கும் திட்டம் கைவிடப்பட்டது உண்மையா ?

(இ) ஆமெனில், காரணமென்ன ?

(உ) கைவிடப்பட்டிருந்தால், மீண்டும் துவக்க உத்தேசமுண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) (உ):— மருத்துவத் துறையில் தேவைக்கு மேற்பட்ட ஆண் நர்சுகள் இருப்பதால் ஆண் நர்சுகளுக்குப் பயிற்சியளிக்கும் திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. மருத்துவத் துறையிலுள்ள ஆண் நர்சுகள், பெண் நர்சுகள் இவர்களின் விகிதாச்சாரம் 1 : 6 ஆகும்போது ஆண் நர்சுகளுக்குப் பயிற்சியளிக்கும் திட்டத்தை மீண்டும் கொண்டுவருவது குறித்து யோசிக்கப்படும்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, மருத்துவ நிலையங்களிலே ஆண், பெண் நோயாளிகளின் எண்ணிக்கை சரி பாதியாக இருக்கிறது. ஆனால் நர்சுகளைப் பொறுத்தவரை ஆண் நர்சுகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. நோயாளிகளைத் தூக்குவது போன்ற காரியங்களை ஆண் நர்சுகள் செய்வது நலமாக இருக்குமென்ற நிலையில், ஆண் நர்சுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த ஏன் இந்தச் சர்க்கார் மயங்குகிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பெண் நர்சுகள் வேண்டுமென்றுதான் எல்லோரும் கேட்கிறார்கள். அவர்கள்தான் நோயாளிகளை மெதுவாகத் தூக்கி நன்றாகக் கவனித்துக் கொள்வதாகக் கூறுகிறார்கள்.

திரு. ம. கமலநாதன் : பொதுவாக நர்ஸ் வேலைக்குப் பெண்கள் தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சொல்வதற்குக் காரணம் அவர்களுடைய அன்பான பேச்சும், மென்மையான போக்கும் தான் என்று கூறுவார்கள். ஆனால் பெண் நர்சுகள் அந்த அளவுக்கு அன்புடனும், பண்புடனும், மென்மையுடனும் நடந்து கொள்ளாமல் முரட்டுத் தனமாக நடந்து கொள்வதால் நோயின் தன்மை அதிகமாகுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : நர்சுகள் செய்யும் பணியானது ரொம்பக் கஷ்டமான பணி. எவ்வளவு நல்ல குணம் உள்ளவர்களாக இருந்தாலும் ஒரு சமயம் இல்லாவிட்டால் ஒரு சமயம் மாறத்தான் செய்யும். பெண் நர்சுகளைப் பொறுத்தவரை அந்த மாதிரி நிலைமை அதிகம் ஏற்படவில்லை.

6th March 1964]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : கனம் அங்கத்தினர் பெண் நர்சுகள் முரட்டுத் தனமாக நடந்து கொள்கிறார்கள் என்று கூறினார்கள். ஆனால் சில நோயாளிகள் பெண் நர்சுகளிடம் மிகவும் முரட்டுத்தனமாக நடந்து கொள்கிற சூழ்நிலை ஏற்படும் போது. . .

(மணி அடிக்கப்பட்டது.)

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : ஆண் தன்மையுடைய இயற்கைப் பண்பை நோக்கி, நர்சுகள் என்ற பணியைப் பெண்களுக்கே தனியாக ஒதுக்கக்கூடிய நிலைமையை அரசாங்கம் ஏற்படுத்துமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஆண் நர்சுகள் எதற்காக இருக்கிறார்கள் என்றால், முக்கியமாக போலீஸ் ஹாஸ்பிடல், மென்டல் ஹாஸ்பிடல் ஆகிய இடங்களில் அத்தியாவசியமாக இருப்பதுதான்.

கனம் சபாநாயகர் : திரு. தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் போன்ற மென்மையான ஆட்கள் இருக்கிறார்கள் இல்லையா ?

* 168 *Q*.—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the number of persons who applied for Nurses' Training in 1963 in Government hospitals;

(*b*) how many of them were selected ; and

(*c*) how many of them belong to Tamil-Nad and how many belong to other States?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (*a*) Three hundred and seventy-five candidates (all from Madras State) applied for admission to the Nurses' Training Course which commenced on 1st January 1963. For the training course which commenced on 1st July 1963, 893 candidates from Madras State and 50 from other States applied for admission.

(*b*) Three hundred and nineteen and four hundred and fifty candidates were selected for the Nurses' Training Courses which commenced in January and July 1963 respectively.

(*c*) All the selected candidates belong to Madras State.

திரு. இராம. அரங்கண்ணல் : போதிய பெண் நர்சுகள் இல்லை யென்று அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். அப்படியானால் விண்ணப்பித்த எல்லோருக்கும் ஏன் வாய்ப்புக் கொடுத்திருக்கக் கூடாது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : விண்ணப்பித்த எல்லோருக்கும் கொடுப்பது என்பது இயலாத காரியம். 'பிரிஸ்கிரைப்டு குவாலிபிகேஷன்' இருப்பவர்களை மட்டுந்தான் எடுத்துக்கொள்ள முடியும்.